REGD.No. M. 6311 தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 PHONE: 3563[illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 29உ சனி (15—10—55) ★ ★ வெளியீடு: புரட்டாசி 30உ ஞாயிறு (16—10—55) [இதழ் 105

பிரிட்டிஷ் இராணியின் அன்னை

ஆஸ்திரேலிய கவர்னர்-ஜெனரலாகின்றார்

இங்கிலாந்து இராணியின் தாய், ஆஸ்திரேலியாவின் அடுத்த கவர்னர்-ஜெனரலாகப் பதவியேற்கவிருக்கிறாராம்.

காமன்வெல்த் நாடுகளுடன் உறவைப் பலப்படுத்துவதற்காக இந்தப்பதவியை ஏற்பதற்கு அவர் சம்மதித்தாராம்.

இப்போது ஆஸ்திரேலியாவில் கவர்னர்-ஜெனரலாயிருக்கும் வில்லியம் சிலிம் பதவி காலம் அடுத்த ஆண்டுடன் முடிகிறது. அவருக்குப் பின்னர், இராணியின் தாய் பதவி ஏற்பாராம்.

ஒரு மொழி இந்தியா வெறும் 'பகற்கனவு'

இந்தி வெறியருக்கு மந்திரி சுப்பிரமணியம் எச்சரிக்கை

இந்தியாவில் உணர்வுபூர்வமான ஒற்றுமை இல்லை என ஒப்பம்!

என்றாலும் ஒற்றுமை வேண்டுமாம்

சென்னை, அக். 14—

"இந்தியாவின் அலுவல் மொழியாக இந்தி மொழி ஆக்கப்படவேண்டும்—என்ற அரசியல் நிர்ணய சபையின் முடிவுக்குத் தரப்படும் 'வியாக்கியானங்'கள் குறித்து, நாட்டில் குழப்பமான எண்ணங்கள் கிளம்பி வருகின்றன;

"இந்தியாவில் உள்ள எல்லா மக்களின் பொது மொழியாக இந்தி வருவதின் மூலம், இந்தியா, ஒருமொழி நாடாகத் திகழ வேண்டும் என்று பொருள்படும்படி சிலர் வியாக்கியானம் செய்கின்றனர்;

"அதாவது—தெலுங்கு, கன்னடம், இந்துஸ்தானி முதலிய மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டோர் இருப்பினும், தமிழ் நாட்டில் தமிழ் மொழியே பொது மொழியாக இருக்கவேண்டும் என்பதைப் போல, இந்தியா முழுமைக்கும் இந்தி பொது மொழியாக இருக்கவேண்டும் என்று அவர்கள் வியாக்கியானம் செய்கின்றனர்;

"இது வெறும் 'பகற்கனவு' என்று கூறி நாம் ஒதுக்கிவிடலாம்;

"மத்திய, மாநில அரசாங்கங்களின் நிர்வாக மொழியாகவும், மத்திய—மாநில சட்ட சபை மொழியாகவும் இந்தி மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், இதன் தவிர்க்க முடியாத விளைவாக, இந்தி, கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் போதனை மொழியாவதுடன், ஆங்கிலம் இப்போது இடம் பெற்றுள்ள எல்லாத் துறைகளிலும் இந்தி இடம் பெறவேண்டும் என்றும் வியாக்கியானம் செய்கின்றனர்;

"இந்தக் கூற்றினை, இந்தி பேசாத பகுதியினர் ஏற்றுக்கொள்ள இயலாது; இதனை ஏற்றுக் கொள்வதால், தங்கள் தங்கள் வட்டார மொழிகளைப் புறக்கணிக்க வேண்டிவரும்; அப்படிப் புறக்கணிப்பதால், வட்டார மொழிகள், இரண்டாவது இடத்தையே பெறும்; இதனால், வெள்ளையர் காலத்தைப் போன்றே வட்டார மொழி வளர்ச்சிக்கு, தொடர்ந்து குந்தகம் ஏற்படும்;

"எனவே, இந்தியை, மத்திய அரசாங்க அலுவல்களுக்கு மட்டும் வைத்துக்கொள்ள வேண்டும்; அப்போதுதான், நாட்டில் மொழிக் குழப்பம் ஏற்படாமல் தடுக்க முடியும்,"

—என்று, நிதி மந்திரி சுப்பிரமணியம், அண்ணாமலை பல்கலைக் கழக 25-வது பட்டமளிப்பு விழா, வேந்தர் பிரகாசாவின் தலைமையில் நடைபெற்றபோது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில் வட்டார மொழிகள்தான் மாநிலங்களின் நிர்வாக மொழியாகவும் கல்வி நிலையங்களில் போதனை மொழியாகவும் இருக்க வேண்டும் என்றும், ஆங்கிலக் கல்வியை அறவே கைவிட்டுவிடுவதும் முடியாத ஒன்று என்றும் பேசியிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

"நீண்டகால வரலாற்றில்—எப்போதும் இல்லாத வகையில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இந்தியா ஒன்றுபட்டு, ஒரே அரசியல் நிர்வாகத்தின் கீழ் இன்றுதான் இருக்கிறது;

'இந்த ஒற்றுமை, பிரிட்டிஷாரால் நமக்கு வழங்கப்பட்டது' என்று சிலர் நினைக்கிறார்கள்; ஆனால், அது தவறு; பிரிட்டிஷார் எப்போதும் இந்தியாவின் 'ஒற்றுமை' பற்றிக் கவலைப்பட்டதில்லை;

துணை தேசிய இனங்களாக நம்மைப் பிரித்துவைத்துக் கொண்டிருந்த மதம், மொழி, பழக்கவழக்கங்கள் போன்ற வேறுபாடுகளை நாம் படிப்படியாக மறந்துவிடுவதற்குக் கற்றுக் கொண்டிருக்கிறோம்;

"அறிவுபூர்வமாக — நாம் எல்லாம் இந்தியாவின் ஒற்றுமை என்ற கொள்கையை ஒத்துக் கொண்டிருந்தாலும், உணர்வு பூர்வமாக—நாம் இன்னும் ஒற்றுமைப்பட்டுவிடவில்லை;

"இந்தியாவின் ஒற்றுமைக்கு உள்ள மிகப் பெரிய ஆபத்து எல்லாம் மொழி வெறிதான்; நான் இதைக் கூறும்போது, எந்த ஒரு பகுதிக்காகவும் கூறவில்லை; இந்தியா முழுமைக்குமாகக் கூறுகிறேன்."

மாநிலக் குழு அறிக்கைக்குப் பின் புதிய மாநிலக் கோரிக்கை

'சத்தீஸ்கர்' என்ற பெயரில் அமைய வேண்டுமாம்

நாகபுரி, அக். 15—

ரெய்ப்பூரைத் தலைநகராகக் கொண்டு, 'சத்தீஸ்கர்' என்ற பெயரில் ஒரு மாநிலம் அமைக்க வேண்டும்—என்று கோரும் இயக்கம் ஒன்றை மத்திய பிரதேச சட்டசபை எதிர்க்கட்சி உறுப்பினரான தக்கூர் இராமகிருஷ்ணசிங் என்பார் துவங்கி இருக்கிறாராம்.

மொழி, கலாச்சார, பூகோள அம்சங்கள், 'சத்தீஸ்கர்' மாநில அமைப்பு வேண்டுமெனக் கோருகின்றன என்று, அந்த ம. சோ. கட்சித் தலைவரும், அவரது சகாக்களும் நம்புகின்றனராம்.

உத்தேசிக்கப்பட்டுள்ள 'மிகப் பெரிய பருத்த' மாநிலமான மத்திய பிரதேசத்துடன் 'சத்தீஸ்கர்' இணைந்தால், அதன் பொருளாதார அபிவிருத்தி வெகுவாக பாதிக்கப்படும் என்று அவர் தெரிவித்திருக்கிறாராம்.

அம்பேத்காரின் புதிய கட்சி

தாழ்த்தப்பட்டோரின் சம்மேளனம் சமூகசேவை இயக்கமாகும்?

நாசிக், அக். 15—

"தாழ்த்தப்பட்டோருக்கென இடம் ஒதுக்குவதை ஒழிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது; அண்மையில் நடைபெற்ற தேர்தல் அனுபவங்கள் தாழ்த்தப்பட்டோருக்கென இடம் ஒதுக்கும் நோக்கத்திற்கு மதிப்பில்லை என்பதைத் தெளிவாக்கியிருக்கின்றன,"

என்று, டாக்டர் அம்பேத்கார் தெரிவித்திருக்கிறார்.

அவர் ஒரு புதிய அரசியல் கட்சி அமைக்கக்கூடும் என்றும் தெரிய வருகிறது; அப்படி அமைத்தால், இப்போதுள்ள தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், தாழ்த்தப்பட்டோரின் வாழ்க்கை நலன்களைக் கவனிக்கும் ஒரு சமூக சேவை இயக்கமாக மாற்றப்பட்டுவிடும் என்றும் கூறப்படுகிறது.

ஆப்கன் கண்டனம்

'பக்தூன் மக்களின் விருப்பத்தை உணராமல், அப்பிரதேசத்தை புதிய மேற்கு பாகிஸ்தானுடன் இணைப்பதை, ஆப்கானிஸ்தான் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க இயலாது,' என்று ஆப்கன் நாடு எதிர்ப்புக் குறிப்பு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

முடிவு ஒத்திவைப்பு!

புதுடில்லி, அக். 14—

இரண்டு நாட்களாக நடைபெற்ற காங்கிரஸ் செயற் குழு, மீண்டும் நவம்பர் 8, 9ந் தேதிகளில் கூடுவது என்றும், அப்போது மாநிலக் குழு அறிக்கை பற்றி முடிவெடுத்துக் கொள்ளலாம் என்றும் தீர்மானித்திருக்கிறதாம்.

அகில இந்தியக் காங்கிரசின் விசேடக் கூட்டம் கூட்டுவதற்கு இப்போது திட்டம் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டதாம்.

காளி பூசைக்காக சம்பள முன்பணம் கோரி ஆர்ப்பாட்டம்

இரயில்வே தொழிலாளர்—போலீசார் மோதுதல்

கல்கத்தா, அக். 14—

அடுத்துவரும் 'பூசை'க்காக, சம்பளத்திலிருந்து முன் பணமும், 11 நாட்களுக்கு 'பூசை' விடுமுறையும் தருமாறு இரயில்வே தொழிலாளர்கள் இங்கு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இவர்கள் தென் கிழக்கு இரயில்வே பொது நிர்வாகியின் அலுவலகத்தின் முன்கூடி அவரை வெளியேறவிடாது 'சிறைப்படுத்தி'யிருக்கின்றனர்.

போலீசார் இடத்திற்கு வந்தபோது, தொழிலாளர்கள், அவர்கள் மீது கற்களை வீசி, உடைத்த நாற்காலி, மேசைகளைக் கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும், போலீசார் உடனே தடியடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து தொழிலாளர்களைக் கலைத்திருக்கின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, 15 போலீசாருக்கும், 25 தொழிலாளர்களுக்கும் காயம் ஏற்பட்டதாம்.

மேற்கு பாகிஸ்தானுக்கு ஒருறுப்பு சர்க்கார்

லாகூர், அக் 14—

புதிய மேற்கு பாகிஸ்தான் மாநிலம் இன்று நிறுவப்பட்டுவிட்டது.

பஞ்சாப், சிந்து, எல்லைப்புற மாநிலம், பலுசிஸ்தான் ஆகிய மாநிலங்களும், பகவல்பூர் (கைபூர்) உள்ளிட்ட சமஸ்தானங்களின் எல்லைகள் ரத்து செய்யப்பட்டு, மேற்கு பாகிஸ்தான், ஒரே கவர்னர்—ஒரே அமைச்சரவையின் கீழ் இனி இடங்கும்.

டாக்டர் கான்சாஹிப்பை முதலமைச்சராகக் கொண்ட ஏழுவர் அடங்கிய அமைச்சரவை, பதவி ஏற்றுள்ளது.

மேற்கு பாகிஸ்தான் கவர்னராக முஸ்தாக் அகமத் குர்மானி பதவி ஏற்றுள்ளார்.

பாகிஸ்தான், பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைபுற மாநிலம் ஆகிய மூன்றும்சேர்ந்து இனிமேல் மேற்குப் பாகிஸ்தானாக இயங்கப் போவதால், அந்த மாகாணங்களின் தனி கவர்னர் பதவிகள் இன்றுடன் ரத்து செய்யப்படுகின்றன.

திரு-கொச்சி ஆற்று நீர்: சென்னை பயன்பெற அனுமதிக்கமாட்டாராம்!

திருவனந்தபுரம், அக் 14—

'மேற்கு தொடர்ச்சி மலையில் உருவாகும் ஆற்று நீரைப் பயன்படுத்தி சில நீர்ப்பாசன மின்சாரத் திட்டங்களை அமுல் செய்வதற்காகவும், அது குறித்து விசாரணை நடத்துவதற்காகவும் சென்னை மாநில சர்க்காருக்கு திட்டக் குழுவினர் ரூ 10-கோடி, தந்திருப்பது குறித்து திரு-கொச்சி சர்க்காருக்கு நேரடித் தகவல் எதுவும் இல்லை,"

என்று, முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

"அம்மாதிரி ஆற்று நீரைத் திருப்பி சென்னை சர்க்கார் பயன்படுத்திக் கொள்ள திரு-கொச்சி சர்க்கார் அனுமதிக்கப் போவதில்லை,"

என்றும், அவர் தெரிவித்துள்ளார்

நரகமே ஆண்டவன் வசிக்குமிடம்!

பரோடா, அக். 15—

ஆண்டவன் வசிப்பதற்கு ஏற்ற இடம் ஆலயமா? அல்லது மோட்சமா? டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் என்ன கூறுகிறார் தெரியுமா?

"கடவுள் வசிக்கவேண்டும் என்று ஒரு இடம் இருக்க வேண்டுமானால், அது மோட்சமல்ல— நரகம்தான்' என்று நான் கருதுகிறேன்"

என்று, டாக்டர் இராதாகிருஷ்ணன், பரோடா பல்கலைக் கழக மாணவர்களிடையே பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

"அங்குதான் மக்களுக்குப் பேரன்பும், இரக்கமும் காட்ட வேண்டியுள்ளது,"

என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 15—10—'55 சனி

காலம்தான் உணர்த்த வேண்டுமா?

"எவர் என்ன முயற்சிப்பினும், நாங்கள் இன ஒதுக்கல் கொள்கையை அமுல் செய்தே தீருவோம்; வெள்ளையரல்லாதார் வெள்ளையருடன் கூடி வாழ அனுமதிக்கமாட்டோம்,"

என்று கூறிவரும் நிறவெறி கொண்டுள்ள தென்னப்பிரிக்க வெள்ளையராட்சியின் போக்கு குறித்து, நாம் அவ்வப்போது இங்கு எழுதி வந்திருக்கிறோம்.

உலகத்திலேயே வேறெந்தப் பகுதியிலும் இல்லாத நிலையில், தென்னப்பிரிக்காவில்தான், 'இன வேற்றுமை' என்ற கொடுமை ஒரு சர்க்காராலேயே மேற்கொள்ளப்பட்டு அமுல் செய்யப்படுகிறது என்பதையும், அந்த இன வேற்றுமைக் கொடுமையின் இதர அம்சங்களையும், ஐ. நா. நியமித்த குழு தனது ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

சில நாட்களுக்கு முன்புதான், தென்னப்பிரிக்க மந்திரி ஒருவர், தாங்கள் அமைக்கவிருக்கிற 'குடியரசி'ல் வெள்ளையரல்லாத எவருக்கும் பிரதிநிதித்துவ உரிமை தரப்போவதில்லை என்று அறிவித்திருந்தார்.

'வெள்ளையரல்லாதாரை, மக்கள் என மதிக்கமாட்டோம்,' என சர்க்கார், தெளிவாக—பகிரங்கமாகவே தெரிவித்துவருகின்றனர்! இந்தக் கொடுமையை இன்னும் சகித்துக் கொண்டுதானிருக்கின்றனர்—'நாகரிகம் பெற்றவர்கள்' என்று தங்களைக் கூறிக்கொண்டிருக்கும் மேலைநாட்டினர்!

பிரிட்டிஷ் தொழிற் கட்சியினர் மட்டும், அண்மையில் நடைபெற்ற தங்கள் கட்சி மாநாட்டில், 'தென்னப்பிரிக்க சர்க்காரின் இன வேற்றுமைக் கொள்கையைப் பிரிட்டிஷ் சர்க்கார் கண்டிக்கவேண்டும்,' என்று பேசியிருக்கின்றனர்.

'நிறத்தால், தங்களிலிருந்து வேறுபட்டவர்கள்' என்ற ஒரே காரணத்திற்காக, மிகப் பின்தங்கிக் கிடக்கும் ஒரு இன மக்களை—வாய்ப்பும், வசதியும், முன்னேற்றமும் பெற்றுள்ள வேறொரு இனமக்கள் அடிமைகளாக்கி அடக்கி ஆளநினைப்பது, இந்த இருபதாம் நூற்றாண்டில் எள்ளிநகையாடுதற்குரியதாகும்.

மனிதர்கள் எல்லோரும் ஒத்த உரிமையும், சமசந்தர்ப்பமும், ஏற்றத்தாழ்வற்ற வாழ்வும் பெற்றுத் திகழவேண்டும்—என்ற உயரிய இலட்சியத்தை எட்டிப்பிடிக்க, உலகின் பல மூலைகளிலும் பெரும போராட்டங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கையில்—உலக மனித சமுகமே ஒரு பெரும் மாற்றத்தைச் சந்திக்கிற தருணம் நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், மனித இனத்தில் ஒரு பிரிவினரை இன்னொரு பிரிவினர் மதிக்க மறுப்பது, மனித இன முன்னேற்றத்திற்கு இழைக்கப்படும் துரோகமாகும—என்று கூறினுல்கூட அது மிகையாகாது.

மனிதர்கள் என்ற சொல்லின் பொருள் இலக்கணத்திற்கு உட்பட எல்லோருக்கும், சாதி, சமய, நிற, இன, பால், நாடு வேறுபாடுகள் இன்றி, உள்ளம் என்று ஒன்று இருக்கிறது; அந்த உள்ளம், உணர்ச்சி வெள்ளத்தின் ஊற்றுகவுமிருக்கிறது — என்பது, மறுக்க முடியாத உண்மையாகும்.

தனது உள்ள உணர்ச்சிக்கு மதிப்பும், செல்வாக்கும் இருக்க வேண்டுமென நினைக்கிற ஒவ்வொருவரும், பிறரின் உள்ள உணர்வுக்கும் மதிப்பளிக்க வேண்டும்; அந்தப் பண்புதான் மக்களை நாகரீகம் பெற்றவர் என்று அழைப்பதற்கு இன்றியமையாததாகும்.

இந்த உயர் பண்பு ஒவ்வொரு தனி மனிதரிடமும் வளரவேண்டுவது இன்றியமையாத ஒன்றாகும். இந்தப் பண்பை மக்களிடத்தில் வளர்ப்பதற்காக, ஒவ்வொரு நாட்டிலும், பேரறிஞர் பலர் இடைவிடாது பாடுபட்டு வருகின்றனர்; ஆனால், இந்தப் பண்பு, வெள்ளையரல்லாதாரை தங்களின் அடிமைகளாக வைத்திருப்பதற்கு, 'தங்களுக்குரிய தகுதி—தங்களது நாகரீகம் தான்' என்று கூறித் திரியும் தென்னப்பிரிக்க வெள்ளையராட்சியினரிடத்தில் இல்லாதிருப்பது, கேலிக்குரியதாகும்!

"அவன் ஒரு கூனன்; ஒரு கால் நொண்டி; காணவே சகிக்க முடியாத உருவத்தினன் என்றாலும், அவனுக்கும் 'உள்ளம்' என்று ஒன்று உள்ளது; அந்த உள்ளத்தில், வேறு எல்லா மனிதர்களின் உள்ளத்திலும் ஊறுவதுபோன்றே விருப்பு, வெறுப்பு, ஆசை, அன்பு, கோபம், தாபம் முதலிய எல்லா உணர்வுகளும் ஊறத்தான் செய்கின்றன"—என்பதை எல்லோரும் அறியவேண்டும் என்று, 'நாட்டர்டாம் நகரத்துக் கூனன்'—என்ற தனது இலக்கியத்தின் மூலம் உணர்த்தினுன்—விக்டர் ஹ்யூகோ!

அவரைப் போன்ற பேருள்ளம் கொண்டோரால், மனிதனை மனிதனுக மதிக்க மறுக்கும் கொடுமை களையப்பட்டு, மனிதப் பண்புமிக்கதாய் அமைந்ததுதான் மேலைநாட்டு நாகரீகம—என்று பெருமை பேசிக்கொள்கின்றனர், மேலை நாட்டவர்!

'அந்த மேலை நாட்டு நாகரீகம் பெற்றவர்கள் தான்' என்று கூறிக் கொள்ளும் தென்னப்பிரிக்க வெள்ளையரின் நடைமுறை, மேலை நாட்டு நாகரீகத்திற்கே பெரும் இழுக்கைத் தேடித் தருவதாகும்.

ஐ. நா. விசாரணைக் குழு எச்சரித்திருக்கிறபடி, தென்னப்பிரிக்க வெள்ளையர், தொடர்ந்து இனவேற்றுமைக் கொள்கையைக் கடைப்பிடிப்பது, அவர்களது அழிவுக்கே வழிகோலுவதாகும்.

தென்னப்பிரிக்க சர்க்காரின் கடந்தகால நடைமுறை, ஐ.நா. குழு செய்துள்ள சிபாரிசுகளை ஏற்கும—என எண்ணுவதற்கு இடந் தருவதாயில்லை.

இந்தக் கொடுமைக் குணாளர்கள் குணம் மாறுவது எப்போது—எப்படி — என்பதை காலம்தான் உணர்த்த வேண்டுமா?

ஆற்று தண்ணீர் பகிர்வுத் தகராறு

மைசூர் சட்டசபையில் கேள்விகள்

"காவேரி தண்ணீரைப் பகிர்ந்து கொள்வது சம்பந்தமாக மைசூர், சென்னை மாநிலங்களுக்கிடையே உள்ள தகராறைத் தீர்க்க ஒரு 'டிரிபியூனல்' (மத்தியஸ்த நீதி மன்றம்) நியமிக்க மத்திய சர்க்கார் ஆலோசித்து வருகிறது," என்று, மைசூர் மாநில மேல் சபையில், கேள்வி நேரத்தில் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

'மைசூர் சர்க்கார் இது சம்பந்தமாகக்கலந்தாலோசிக்கப்பட்டதா?' என்று கேட்கப்பட்டபோது, 'இது சம்பந்தமான மத்திய மசோதா, மாநில சர்க்காருக்கு அனுப்பப்பட்டது,' என்று, மந்திரி சொன்னார்.

இரு மாநிலங்களுக்கிடையே தண்ணீரைப் பகிர்ந்து கொள்வது சம்பந்தமாக 1892-ல் ஒரு ஒப்பந்தமும், 1924-ல் ஒரு ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டனவென்று அவர் கூறினர்.

முதல் ஒப்பந்தத்தை மாற்றும் நோக்கமில்லையெனறும், 1924-ம் வருட ஒப்பந்தம் 1974-ல்தான் புனர்பரிசிலனை செய்யவேண்டுமென்றும், ஆனல் சில புள்ளி விவரங்கள் தயாரிக்க சர்க்கார உத்தேசித்துள்ளதென்றும் மந்திரி தெரிவித்தார்.

வெளிநாட்டுத் தலைவர்கள் இந்தியா வருகை

புதுடில்லி, அக் 14—

இந்தக் குளிர்காலத்தில், உலகின் பல இடங்களிலிருந்து 4 மன்னர்கள், 3 பிரதம மந்திரிகள், ஒரு குடியரசுத் துணைத் தலைவர், பல மந்திரிகள், இந்தியாவிற்கு வருகை தரப்போகின்றனர்.

பர்மா பிரதமர் யூ. நூ. அக் 17ல் வருகிறார்.

ரஷ்யப் பிரதமர் புல்கானின் நவ 18ல் வருகிறார்; சென்னை, பெங்களூருக்கும் புல்கானின் செல்வார்.

கானடா அயல் நாட்டு மந்திரி பியர்ஸன் அக். 24-ந் தேதியன்றும், இந்தோனேஷிய குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் ஹட்டா அக் 25-ந் தேதியன்றும் வருகின்றனர்.

சவூதி அரேபியா, எதியோபியா, ஈரான, நேப்பாள மன்னர்களும் வருகை தருவர்

தாய்லாந்து பிரதமர் சோங்ராமும் கூடிய விரைவில் இந்தியாவுக்கு வருவார்.

75 மைல் உயரம் சென்ற ராக்கெட்!

வாயு உருவத்திற்கு மாற்றப்பட்ட 'சோடியம்' உலோகத்தினுல் நிரப்பப்பட்ட ஒரு புதுவிதமான ராக்கெட்டை அமெரிக்க விமானப் படை நிபுணர்கள் நியூ மெக்சிகோ பாலைவனத்தில் சோதித்துப் பார்த்தனராம்; அது, ஆரஞ்சு வர்ண ஒளியை வெளிப்படுத்திக்கொண்டு, ஆகாயத்தில் 75 மைல் உயரம் சென்றதாம்.

வாயு மண்டலத்தின் மேற்பரப்பில் இயற்கையிலேயே 'சோடியம்' இருக்கிறது என்பதை நிரூபிக்கவும், அதன் உற்பத்தி இடம், அளவு, தன்மைகள் ஆகியவற்றை நிர்ணயிக்கவும் இந்தச் சோதனை நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சோதனை நடந்த இடத்திலிருந்து 320 மைல்களுக்கப்பால் டெக்ஸாசைச் சேர்ந்த அமரில்லோ என்ற இடத்தில் உள்ளவர்களும் இதைப் பார்க்க முடிந்ததாம்!

திரு-தமிழக மக்களின் அதிருப்தி

'தெளிவான கோரிக்கைகளைப் புறக்கணித்தது அநியாயம்'

மக்கள் சபை உறுப்பினர் ஏ. நேசமணி கருத்து

திருவனந்தபுரம், அக். 12—

"மாநிலக் குழுவின் சிபாரிசுகள் ஏமாற்றத்தைத் தந்திருக்கின்றன,"

என்று, தி. த. நா. காங்கிரஸ் தலைவர் ஏ. நேசமணி தெரிவித்திருக்கிறார்.

"திரு-கொச்சி தமிழ் மக்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும், குழுவினர் புறக்கணித்து விட்டனர்;

"தேவிகுளம், பீர்மேடு போன்ற பெரும்பாலும் தமிழ் பேசும் பகுதிகளைக் கேரளத்துடன் இணைத்திருப்பது, இந்தியாவின் இதர பகுதிகளின் மாற்றங்களுக்காகச் சொல்லியிருக்கும் எந்தக் கருத்திற்கும் பொருத்தமானதாயிருக்கவில்லை;

"துங்கபத்திரா விஷயத்தில், பெல்லாரிக்குச் செய்யப்பட்டிருப்பது, பெரியாறு விஷயத்தில் சென்னைக்குச் செய்யப்படவில்லை;

"மேலும், நெய்யாற்றங்கரை, சித்தூர் தாலுகாக்கள் விஷயத்திலும் எங்களது கோரிக்கைகளை குழுவினர் ஏற்றுக்கொள்ளவில்லை; இது அந்தப் பகுதி மக்களின் எண்ணங்களைப் புறக்கணிப்பதாகும்,"

என்று, நேசமணி தெரிவித்திருக்கிறார்.

★

'அநீதியானது, ஜனநாயக விரோதமானது'

மாநிலக் குழுவின் அறிக்கை குறித்து பீகார் மந்திரி

புதுடில்லி, அக். 13—

"பீகாரைப் பொறுத்து மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள், அநியாயமான — தன்னிச்சையான—நேர்மையற்ற—ஜனநாயக விரோதமானவையாகும்,"

—என்று பீகார் பொது மராமத்து இலாகா மந்திரி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"கிஷன்கஞ் வட்டத்தின் ஒரு பகுதியை மேற்கு வங்கத்திற்கு மாற்றுவதென குழு செய்துள்ள சிபாரிசு அநியாயமானதாகும்;

"கிஷன்கஞ் வட்டத்தில் முஸ்லீம்களே பெருவாரியாக வசிக்கின்றனர் என்பதை குழுவினரே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அந்த முஸ்லீம்கள், கிஷன்கஞ் வட்டம் மேற்கு வங்கத்துடன் இணைவதால், தங்கள் மொழி, கலாச்சார உரிமைகள் பாதிக்கப்படுவதாகக் கவலைப்படுவர்; மேலும், கிழக்கு வங்கத்திலிருந்துவரும் அகதிகளுக்கு அங்கு இடமளிப்பதால், தங்கள் வாழ்வு சீர்குலையும் என அஞ்சுகின்றனர்; முஸ்லீம்களின் இந்த அச்சத்தைக் குழு வரவேற்பதாகவே தெரிகிறது;

'பல இலட்சம் முஸ்லீம்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களின் கலாசார, மொழி, உரிமைகளைப் பறிக்கிற குழுவின் சிபாரிசு சட்ட விரோதமானது — ஜனநாயக விரோதமானது—மதச் சார்புடையது; ஏனெனில், இந்தியாவின் அரசியல் சட்டம் மொழி, மத, சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு வழங்கியிருக்கிறது."

மேலும் மந்திரி, 'அன்சாரி குழுவின் அறிக்கை, பீகாரைப் பொறுத்த மட்டில் எப்படி அநீதியானது' என்பதை விளக்க பல காரணங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மொழிவழி மாநிலம் பெற்றவர் மொழிச் சர்ச்சை கூடாதென்கிறார்

"சித்தூரை, சென்னை மாநிலத்தில் சேர்ப்பதற்குத் தமிழர்கள் நடத்திவரும் கிளர்ச்சியை நிறுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்; எல்லைத் தகராறு பற்றி இரு மாநிலங்களின் சர்க்கார்கள் கூடிப் பேசி உடன்பாடு காண்பதற்கு விட்டுவிடுங்கள்; சென்னை மாநிலத்திற்குச் சேரவேண்டிய பிரதேசத்தை ஆந்திரா மகிழ்ச்சியுடன் கொடுத்துவிடும்; எந்த இடத்தையும் பலாத்காரமாகவோ, கர்ப்பந்தமாகவோ வைத்திருக்கமாட்டோம்; இரு சர்க்கார்களுக்குமிடையே ஏற்படும் எம்முடிவையும் ஏற்குமாறு தமிழர்களிடமும், தெலுங்கர்களிடமும் கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, ஆந்திர துணை முதலமைச்சர் என். சஞ்சீவி ரெட்டி அவர்கள் சித்தூர் நகரசபை அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னர்:—

"ஒற்றுமையை வளர்ப்பதன் மூலம் கோதாவரியையும், கிருஷ்ணையையும், தெற்கிலுள்ள காவேரி, தாம்பிரபரணியுடன் இணைக்கலாம்; இம்மாதிரி கூட்டு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பளிக்க முதலமைச்சர் காமராசர் ஏற்கனவே உறுதிமொழி அளித்திருக்கிறர்;

"மொழித் தகராறுகளை ஒழித்து ஏழ்மையை விரட்டும் பொதுச் பிரச்சினையில் கவனம் செலுத்துவோம்."

காலம் மாறுகிறது!

சென்னையின் முன்னுள் கவர்னர் பவநகர் மன்னர், இராஜ்கோட்டில் உள்ள தம் இல்லத்தில், 'சர்க்கா'வில் நூல் நூற்றுக்கொண்டிருக்கிறராம்! தீவிர விவசாயியான அவர், பகல் நேரத்தில், தம்முடைய பண்ணையிலேயே பணியாற்றுகிறராம்; இயந்திர சாதனங்கள் மூலம் சாகுபடி செய்யும் முறைகளைக் கண்டுபிடிப்பதில் ஈடுபடுகிறராம்.

சாதியை ஒழிக்க

கிருபளானி கூறும் வழி

"வரப்போகும் தேர்தலில் போட்டியிட எல்லாக் கட்சியினரும், சாதி—குல வேறுபாடின்றி சிறந்த நபர்களைப் பொறுக்கி எடுத்து, சாதிகளை ஒழிப்பதில் அரசியல் கட்சிகள் வழிகாட்டிகளாயிருக்க வேண்டும்;

"மக்கட்தொகைக் கணக்கெடுப்புக் குறிப்பில், சாதி—மதங்களைக் குறிக்கும் பிரிவுகளை நீக்கிவிட வேண்டும்;

"பள்ளிகள், கல்லூரிகள், நீதி மன்றங்கள் ஆகியவற்றிற்கான மனு நமூனுக்களிலும் சாதி—மதக் குறிப்புகளை அகற்ற வேண்டும்,"

என்று, ம சோ. கட்சித் தலைவரான கிருபளானி பத்திரிகையாளரிடம் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

'கட்டாயக் கல்வி தோற்றது ஏன்?'

'பள்ளிகளில் மத போதனை கூடாது'

'மக்கட் தொகை 300 கொண்ட கிராமங்கள்தோறும் பள்ளிகள் வேண்டும்'

5 முதல் 14 வயது வரை இலவசக் கல்வி?

சென்னை, அக். 14—

"ஆறு முதல் 12 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு கட்டாயமாகக் கல்வி தரவேண்டும் என்ற திட்டம் று 21 நகரசபைப் பகுதிகளிலும், 230 நகர் சுற்றுப்புறங்களிலும், 681 கிராமப் புறங்களிலும் அமுல் செய்யப்பட்டு வருகிறது; ஆனல், இது முழுவதும் வெற்றிகரமாக நடைபெறவில்லை;

"அதிகமான பேர்களைப் பள்ளியில் சேர்த்து, தொடர்ந்து படிக்கச் செய்வதில் பெற்றோர் கொண்டுள்ள கவனக் குறைவும், அக்கரையின்மையுமே இந்தத் தோல்விக்குக் காரணமாகும்; இன்னும் மேலான நல்லதொரு சூழ்நிலையை கிராமப் பகுதிகளில் கட்டாயக் கல்விக்கு ஆதரவாக உருவாக்க வேண்டியது அவசியமாகும்,"

—என்று, சென்னை ஆரம்பக் கல்வி சீர்திருத்தக் குழு, தன்னுடைய சிபாரிசுகளில் குறிப்பிட்டுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் சம்பந்தமான கடமைகளையும், அதிகாரங்களையும் மாவட்டக் கழகங்களிடமிருந்து புதிதாக நிறுவப்படும் 'பிராந்திய போர்டு'களுக்கு மாற்ற வேண்டுமென்றும், இடைநிலைப் பள்ளிகளில் நடுத்தர படிவங்களையும், ஆரம்ப வகுப்புகளையும், ஆதாரக் கல்வி முறைக்கு மாற்ற வேண்டுமென்றும், ஆரம்பக் கல்விக் குழு யோசனை கூறியிருப்பதாக நம்பப்படுகிறது.

தனிப்பட்டோர் நிர்வாகத்தின் கீழுள்ள ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும், தகுந்த முறையில் நிறுவப்பட்ட நிர்வாகக் குழு அமைக்க வேண்டுமென்றும், நிர்வாகக் குழுவில் சர்க்கார் நியமன உறுப்பினர்களும் வேண்டுமென்றும் குழு கருதுவதாகத் தெரிகிறது.

பல பள்ளிக்கூடங்களை வைத்து நடத்தும் நிறுவனங்கள், ஆரம்பப் பள்ளிகளுக்காக மட்டும் தனி 'கவர்னிங் கவுன்சில்' (நிர்வாக மன்றம்) அமைக்க வேண்டுமென்று குழு யோசனை சொல்லியிருப்பதாகத் தெரிகிறது.

கட்டாய ஆரம்பக் கல்வி முறை வெற்றிகரமாக நடக்கவில்லை என்றும், குழந்தைகளின் பெற்றோருடைய வறுமையும், அசட்டையுமே இதற்குக் காரணமாகுமென்றும், குழு எடுத்துக்காட்டியிருக்கிறதாம்.

மேலும், குழுவினர் கீழ் வரும் சிபாரிசுகளைச் செய்திருக்கக்கூடுமென்று சொல்லப்படுகிறது:—

இனிமேல், ஆரம்பப் பள்ளிக்கூடங்களை நகரசபைகளும், பிராந்தியபோர்டுகளும் மட்டுமே திறக்க அனுமதிக்க வேண்டும்.

கூடுமானவரையில் முதல் வகுப்பிலிருந்து மூன்றும் வகுப்புவரை ஆசிரியைகளையே நியமிக்க வேண்டும்; போதன முறைப் பயிற்சி பெருதவர்களை முழு-நேர ஆசிரியர்களாக நியமிப்பதைக் காட்டிலும் மணமான மகளிரை, 'சில மணி நேர' ஆசிரியைகளாக நியமிக்கலாம்; ஆசிரியர்களின் சம்பள விகிதங்களையும் உயர்த்த வேண்டும்.

★

புள்ளி விவரங்கள்

மொத்தத்தில், பள்ளிக்கூடம் செல்லக்கூடிய 6 முதல் 12 வரை வயதான 24,59,000 சிறுவர்களும், 24,98,000 பெண்களும் உள்ளனர்; ஆனல், 17,50,000 சிறுவரும், 10,70,000 பெண்களும் மட்டுமே பள்ளிக்கூடம் செல்கின்றனர். அதாவது குத்துமதிப்பாக 71.2 சதவிகிதம் சிறுவரும், 42.8-சதவிகிதம் பெண்களும்தான் படிக்கிறார்கள். இது 1954-ம் ஆண்டு மார்ச் 31ல்இருந்த நிலவரம்; இந்த சதவிகிதமும் மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுகிறது. மலபார் மாவட்டத்தில்தான் எல்லா மாவட்டங்களையும்விட அதிகமான பேர் படிக்கிறார்கள்; சேலம் மாவட்டம் தான் கடைசி நிலையிலுள்ளது.

மொத்தம் 21,423 ஆரம்பப் பள்ளிகளும், 905 ஆதாரப் பள்ளிகளும் இருந்தன; அவற்றில் 2,388 உயர்தர ஆரம்பப் பள்ளிகள் (5 வகுப்பு வரை உள்ளவை); 105 உயர்தர ஆதாரப் பள்ளிகள்.

1954 மார்ச் 31-ந் தேதி மொத்தம் 1921 ஓராசிரியர் பள்ளிகள் இருந்தன வேலையின்மை நிவாரண திட்டத்தின்கீழ் புதிதாக நிறுவப்படும்ஓராசிரியர் பள்ளிகள் கணக்கு இதில் சேரவில்லை.

2000 பள்ளிகளில் தோட்ட வேலைக்கானவசதிகள் இல்லை; 20,000 பள்ளிகளில் குழந்தைகள் விளையாடுவதற்கான இடம் இல்லை. இவைகள் இருக்குமிடங்களிலும் ஒரு ஏகராவுக்குக் குறைவான இடமிருப்பதால், விளையாடுவதற்குப் போதுமானதன்று!

★

குழு அனுப்பிய வினத் தாளுக்கு சுமார் 1500 பதில்கள் கிடைத்தன; குழுவினர் 150-க்கு மேற்பட்ட ஆரம்பப் பள்ளிகளுக்கும், போதனமுறைப் பயிற்சிப் பள்ளிகளுக்கும் சென்று பார்வையிட்டனர்; 350 தனி நபர்களுடையவும், ஸ்தாபனங்களுடையவுமான 'சாட்சியங்களை'ப் பதிவு செய்தனர்.

★

சர்க்கார் 1207 ஆரம்பப் பள்ளிகளையும், ஆதாரக் கல்விப் பள்ளிகளையும் நடத்துகிறார்கள்

மற்ற நிறுவனங்கள் நடத்தும் ஆரம்பப் பள்ளிகள், ஆதாரக் கல்விப் பள்ளிகள் விவரம் வருமாறு:

மாவட்டக் கழகங்கள்: 8,099; பஞ்சாயத்துகள்: 964; நகரசபைகள்: 995;

சர்க்கார் மானியம் பெறும் தனிப்பட்ட 'மிஷன்' பள்ளிகள்: 2,946; சர்க்கார் மானியம் பெறும் 'மிஷனல்லாத' தனிப் பள்ளிகள்: 7,178; மானியம் பெருத தனி 'மிஷன்' பள்ளிகள்: 27; 'மிஷனல்லாத' பள்ளிகள்: 27.

குறைந்த விகிதாச்சாரம்!

1954 மார்ச் 31-ந் தேதி, வேலையிலிருந்த மொத்தம் ஆசிரியர்கள் தொகை 95,616; அதில், பயிற்சி பெருத ஆசிரியர்கள் 100-க்கு 4-பேர்கள்தான்; இந்தியாவின் மற்றப் பகுதிகளுடன் ஒப்பிடுகையில், இதுதான் மிகவும் குறைச்சலான விகிதாச்சாரமாகும்.

வழி வகைகள் காணுக!

ஐந்து வயது நிரம்பிய எல்லாக் குழந்தைகளுக்கும் 14 வயது நிரம்பும்வரை கட்டாய இலவசக் கல்வி யளிக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

5 முதல் 14 வயது வரையுள்ள ஆண், பெண் குழந்தைகள் மொத்தம் 63,00,000 இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது; அதில், 32,00,000 பேர்தான் பள்ளிகளில் படிக்கிறார்கள்; எனவே, குழந்தைகள் தன்னிச்சையாகப் பள்ளிக்கூடங்களில் சேருவதற்கான வழி வகைகள் காணப்பட வேண்டும்.

முதல் வேலை அதுதான்

300 அல்லது 500 மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் பள்ளிக்கூடம் வைத்துத் தருவது முதல் வேலையாகும்; கூடுமானல், அந்தக் கிராமத்திலேயே பள்ளிக்கூடம் வைக்க வேண்டும்; இல்லையேல், அக்கிராமத்துக்கு அருகிலேயே வைக்க வேண்டும்.

மனதைக் கவரும் நிலை வேண்டும்

குழந்தைகள் மனதைக் கவரும் வகையில் பள்ளிகளின் சூழ்நிலையும், போதன முறையும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்; அப்போதுதான், குழந்தைகள் நிறைய சேருவதற்கு வழியுண்டாகும்.

பெரிய பிரச்சினைதான்—என்றாலும்......

இலவசமாகப் பகல் உணவு அளிக்கவும், புத்தகங்கள், 'சிலேட்டுகள்' வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். இது பெரிய பிரச்சினை என்பதில் சந்தேகமில்லை; ஆனல், காலதாமதமின்றி, எவ்விதமாவது இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; எங்கெந்த கிராமங்களில், இதற்காகும் செலவில் பாதியை ஏற்றுக்கொள்ள மக்கள் முன்வருகிறார்களோ அங்கெல்லாம் இத்திட்டத்தை ஆரம்பிக்கலாம்.

உதவிகளைப் பெறுக!

பள்ளிக்கூடங்களுக்குத் தகுந்த கட்டிடங்கள் கட்டுவதற்கு உடனடியாக முயற்சி செய்ய வேண்டும்; அதிகச் செலவு பிடிக்காததும், நல்ல காற்றோட்டமுள்ளதும், ஒரே அளவு வெளிச்சமுள்ளதுமான கட்டிடங்களை எழுப்ப வேண்டும். தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் கிடைக்கும் உதவிகளை இதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

குழந்தைகளுக்கான விளையாட்டு மைதானம், தோட்டக் கால்களைப் பெறுவதற்கு நில நன்கொடை இயக்கத்தைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் தகுதியான நூல் நிலையம் அவசியம்.

சேவை புரிவதற்குத் தூண்டுகோல்!

ஓராசிரியர் பள்ளிகளின் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்துதரவேண்டும். ஆசிரியர்கள் இம்மாதிரி பள்ளிகளில் சேவை புரிய முன்வருவதற்கு இது தூண்டுகோலாக இருக்கும்.

நோக்கத்தின் எல்லை!

ஆரம்பக் கல்விப் பள்ளியில் 8 வருட காலம் நன்கு இணைக்கப்பட்ட படிப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் குழு கருதுகிறது பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் வயது 5 என நிர்ணயித்துள்ளது.

உயர்தர ஆரம்பப் பள்ளிகளும், நடுத்தரப் பள்ளிகளும் ஆதாரக் கல்விப் பள்ளிகளாக மாற்றப்படும் வரையில், ஆரம்பப் பள்ளி வகுப்புகளுக்கும் நடுத்தரப் பள்ளி படிவங்களுக்கும் ஒரே சீரான பாடமுறை வகுக்கப்பட வேண்டும்.

கட்டாய முறையில் ஆங்கிலம்

ஐந்தாம் வகுப்பு முதல் எட்டாவது வரை எல்லா மாணவருக்கும் கட்டாய ஆங்கிலம் போதிக்கலாம்.

மேலும் என்ன?

எட்டாவது வகுப்பு படிப்பு முடிவில் 'சர்க்கார்' பரீட்சை வைப்பதும், பள்ளிக்கூடங்களில் மேற்கொண்டு பரீட்சிக்காமலே 4—வது படிவத்தில் சேர்த்துக்கொள்ள மாணவனைத் தகுதியாக்கும் அத்தாட்சிப் பத்திரம் (ஈ.எஸ் எல் சி) வழங்கும் முறை நீடிக்கலாம்

இப்போது அமுலில் உள்ளதும், 1939-ல் கொண்டுவரப்பட்டதுமான ஆரம்பப் பள்ளிப் பாடத் திட்டத்தை சீர்திருத்தியமைக்கும் பிரச்சினையை ஒரு 'அட்ஹாக்' குழுவின் ஆலோசனைக்கு விட்டுவிடலாம்.

பஞ்சாப் வெள்ளம்: சேத மதிப்பு ரூ. 35 கோடியாம்

மாநில அமைச்சர்கள் தரும் புள்ளி விவரம்

அம்பாலா, அக். 13—

பஞ்சாப் நிதி மந்திரி உஜ்ஜர் சிங் தந்துள்ள விபரப்படி, பஞ்சாபிற்கு ஏற்பட்டுள்ள வெள்ளத்தினுல் சுமார் ரூ. 35-கோடி சேதமடைந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

"கிராமப்புறங்களில் ரூ. 10 கோடி பெறுமான வீடுகளும், நகர்ப்புறத்தில் சுமார் 5 கோடி பெறுமான வீடுகளும் நாசமாயின; மொத்தத்தில் 2,50,000 வீடுகள் நாசமாயின—அல்லது இடிந்தன—என்று கணக்கிடப்பட்டிருக்கிறது; ரூ. 24-கோடி என மதிப்பிடப்படுகிற பருத்தி விளைச்சலில் பாதிக்கு மேல் அழிந்துபட்டு விட்டது; பயிர்களுக்கு ஏற்பட்ட மொத்தச் சேதம் மட்டும் ரூ. 20 கோடியாகும்," என்று அந்த மந்திரி ஒரு பேட்டியின்போது தெரிவித்திருக்கிறார்.

56 இலட்சம் ஏகர் நிலம் தண்ணீரில் மூழ்கியது!

புதுடில்லி, அக். 14—

பஞ்சாப், பெப்சு ஆகிய மாநிலங்களில ஏற்பட்ட வெள்ளத்தால், சுமார் 56 இலட்சம் ஏகர் நிலம் தண்ணீரில் மூழ்கியிருப்பதாக மத்திய சர்க்காருக்குச் செய்திகள் கிடைத்துள்ளதாம் சேதங்கள் பற்றி திட்டவட்டமாகத் தெரியாவிட்டாலும், குறைந்தது ரூ 30 கோடி பெறுமானமுள்ள பயிர்கள் நாசமடைந்திருக்குமென மதிப்பிடப்படுகிறதாம். 7,000 கிராமங்கள் பாதிக்கப்பட்டன; 75,000 வீடுகள் அழிந்தன; 1,50,000 வீடுகள் சேதமடைந்தன—என்றும் செய்திகள் கூறுகின்றன.

ரூ. 24 கோடி பருத்தி பாழாகியதாம்!

'பஞ்சாப் — பெப்சு வெள்ளத்தினுல் 1,200 பேர் மாண்டுள்ளனர்,' என்றும், 'பஞ்சாபில் மட்டும் 1,000 பேர் இறந்தனர்' என்றும் குறிப்பிட்ட அம்மாநில முதலமைச்சர் தொடர்ந்து சொன்னர்:—

"பஞ்சாபில், ரூ. 100 கோடி பெறுமான பயிரும், சொத்தும் நாசமடைந்துள்ளன; ஆயிரக்கணக்கான கால்நடைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன; வீடுகள் இடிந்து வீழ்ந்ததால் ரூ. 5-கோடிக்கு கஷ்டமேற்பட்டிருக்கிறது; ரூ. 24 கோடி பெறுமான பருத்தி பாழடைந்தது."

10,000 கால்நடைகள் மாண்டனவாம்!

பெப்சுவில் 200 பேர் இறந்ததாகக் குறிப்பிட்ட அம்மாநில முதலமைச்சர் கூறியதாவது:—

"பெப்சுவில் நிவாரண வேலைகளுக்காக ரூ 4 கோடி திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது; 4 இலட்சம் அரிசன மக்கள் வீடிழந்து தவிக்கின்றனர்; 10,000 கால்நடைகள் மூழ்கி மாண்டன; 5000 சதுரமைல் தண்ணீரில் மூழ்கியுள்ளது: 17 இலட்சம் ஏகர் தானியப் பயிர் அழிந்தது;

ரூ 4 கோடி திட்டத்தின் மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு 8 தினங்களுக்கு இலவச உணவு வினியோகிக்கப்படுகிறது"

12,57,100 பேர் பாதிக்கப்பட்டனராம்!

ஒரிசாவில் செப்டம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினுல் 4,000 கிராமங்களைச் சேர்ந்த 12,57,100 பேர் பாதிக்கப்பட்டதாக ஒரிசா சட்டசபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'8,85,000 ஏக்கர் நெல் பயிர் நாசமாயிற்று. சுமார் 400 சதுர மைலுக்கு சாகுபடி நிலம் 5 அடி ஆழம் நீரில் மூழ்கியுள்ளது.' என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நில அரிப்பால் நேரிட்ட விளைவு

கங்கை நதியின் நில அரிப்பால் முஜாபர்பூர் மாவட்டத்தில், 900-குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு நிவாரணம் அளிக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

புதுடில்லியில் பாழ்!

யமுனை நதியில் தண்ணீர் மட்டம் குறைந்ததினுல், புதுடில்லியில் வெள்ளம் தணிந்துவிட்டது; அம்மாநிலத்தில் 80,000 ஏகர் பயிர் அழிந்தது; இலட்சம் பேர் வீடிழந்தனர்;

கரை புரண்டோடும் ரவி நதியின் தவிப்பு

'மேற்கு பஞ்சாபில், ரவி, சட்லெஜ் நதிகளின் வேகம் தணிந்தபாடில்லை; பகவல்பூரில், சட்லெஜ் நதியின் வெள்ள மட்டம் உயர்ந்து கொண்டே போகிறது; மீர்மஹல் நகர் பகுதியில் 7 அடி தண்ணீர் ஓடுகிறது: இதனுல், 20,000 பேர் தவிக்கின்றனர்; சியால்கோட்டில் ரவி கரை புரண்டோடுகிறது.

சாகுபடி நிலம் சுமார் 400 சதுர மைலுக்கு 5 அடி ஆழ தண்ணீரில் மூழ்கியுள்ளதாம்.

★

ரூ.3இலட்சம் நன்கொடை

எதியோப்பியா மன்னரின் தாராள உதவி

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கென, எதியோப்பியா மன்னர் ரூ. 3 இலட்சம் நன்கொடை அளித்துள்ளார்.

• • •

பஞ்சாப் வெள்ள நிவாரணத்துக்காக, மத்திய சர்க்காரின் முன்னுன் பாதுகாப்பு அமைச்சர் சர்தார் பல்தேவ் சிங், ரூ. 1 இலட்சம் நன்கொடை அளித்திருக்கிறார்.

ரஷ்ய யோசனை

அமெரிக்கத் தலைவர் ஏற்றுக்கொண்டார்

டென்வர், அக். 13—

அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் உள்ள கேந்திர இடங்களில், இராணுவக் கண்காணிப்புக் குழுக்களை நிறுத்தி வைக்கலாமென்று ரஷ்யா தெரிவித்திருந்த யோசனையை ஏற்றுக்கொள்வதாக அமெரிக்கத் தலைவர் ஐசன் ஹோவர் அறிவித்துள்ளார்.

கண்காணிப்புக் குழுக்களை நிறுத்துவது இரு நாடுகளுக்கு மிடையே நல்லுறவு ஏற்படுத்த உதவியாக இருக்குமானுல், இந்த யோசனையை ஏற்றுக்கொள்வதாக அவர் கூறியுள்ளார்.

முன்னுள் ராணுவத்தினர்

நூறு வயதானோரை சர்க்கார் கவுரவிப்பர்

100 வயது அல்லது, அதற்கு அதிக வயதாகியுள்ள எல்லா முன்னுன் இராணுவத்தினரையும், அடுத்த குடியரசுத் தினக் கொண்டாட்டத்தின்போது, சர்க்கார் செலவில் டில்லிக்கு அழைத்துக் கவுரவிக்க இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்.

உபயாக தின அணிவகுப்பு, கிரா. மிய நடனங்கள், மற்ற வகை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு விசேட இடத்தில் அவர்கள் அமர்த்தப்படுவார்கள்.

ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்

இந்தியாவின் 'ஒற்றுமை'யே அடிப்படையாம்

ம. சோ. தலைவர் கிருபளானி கூறுகிறார்

"மாநிலக் குழுவினர் நல்ல வேலை தான் செய்திருக்கின்றனர்;

'இந்தியா'வின் எந்த ஒரு பகுதியும் இந்தியாவிலிருந்து போய் விடவில்லை;

"இரு மொழி மாநிலங்கள் அமைப்பதை நான் எதிர்க்கவில்லை; இரு மொழி மாநிலங்களைத் தவிர்த்துவிட முடியாது; என்னதான் நாம் நிலப் படத்தைத் திருத்தி அமைத்தாலும், இரு மொழிப் பகுதிகள் அதில் இருந்துதான் தீரும்;

"அடிப்படையில், இந்தியாவின் ஒற்றுமையில் நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்;

"நமக்கிடையே உள்ள வேறுபாடுகள் எல்லாம் மிகச் சொற்பமானவை — அற்பமானவை; இந்த வேறுபாடுகள், நமது 'ஒற்றுமை'யில் குறுக்கிடக்கூடாது என்பதே எனது கருத்து;

"'தட்சிணப்பிரதேச' அமைப்பை தமிழ் நாட்டவர் ஒத்துக்கொள்ளவில்லை என்று அறிகிறேன்; இரு சாராரும் ஒத்துப்போனால், அப்படி ஒரு மாநிலம் அமைவதை நான் வரவேற்கிறேன்,"

என்பதாக, ம. சோ கட்சித் தலைவர் ஜே. பி. கிருபளானி, சென்னையில் நிருபர்களிடை பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

உறுப்பினர்களும் இதே கருத்தைத் தான் தெரிவித்திருக்கின்றனர்.

மலைப் பகுதி மக்களின் எண்ணங்களுக்குக் குழுவினர் மதிப்பளித்ததாகவே தெரியவில்லை என்றும், அவர்கள், இமாசலப் பிரதேசம் தனியொரு மாநிலமாக விளங்க வேண்டுமென்றே விரும்புகின்றனர் என்றும் அந்த உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்றனராம்.

★

காமராசர் - நேசமணி சந்திப்பு

நாகர்கோவில், அக். 11—

மாநிலக் குழுவின் அறிக்கை குறித்து, திரு. தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஏ நேசமணி எம் பி., சென்னை முதன் மந்திரி காமராசர் மற்றும் பல தலைவர்களுடன் சந்தித்துப் பேசுவார் என்று தெரிகிறது.

5 தாலுகாக்கள் தமிழகத்துடன் இணைவது குறித்து மகிழ்ச்சிதான் என்றாலும், எஞ்சியுள்ள நான்கு தமிழ் தாலுகாக்களில் வாழும் தமிழர்களின் நிலை குறித்து வருத்தப்படுவதாகவும், குறிப்பாக—தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களில் வசிக்கும் தமிழர்களின் எதிர்காலம் குறித்து வெகுவாகக் கவலைப்பட வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேசமணியின் சென்னை வருகையில் பலன் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

★

'சிபாரிசுகளை உடன் அமுல் செய்'

ஆந்திர சர்க்கார் வற்புறுத்துமாம்

கர்னூல், அக். 14—

"'ஆந்திராவுடன் இணையவேண்டும்' என, மாநிலக் குழு சிபாரிசு செய்துள்ள பெல்லாரி, ஹோஸ்பெட், சிறுகுப்பா தாலுகாக்களில் வசிக்கும் கன்னடியரை, அவர்களது மொழி, கலாச்சாரம், பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றில் நியாயமாக நடத்துவோம்,"

என்று ஆந்திர மாநில உதவி முதன் மந்திரி என். சஞ்சீவி ரெட்டி, ஆந்திர சர்க்கார் சார்பில் உறுதி தெரிவித்திருக்கிறாராம்.

"துங்கபத்திரா திட்டத்தின் அதிகபட்சப் பலன்களைப் பெற்று, பஞ்சத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டுள்ள இராயலசீமைப் பகுதிகளுக்கு வெகு சீக்கிரமாகத் தரவேண்டும் என்பது ஆந்திர சர்க்காரின் விருப்பம்; பெல்லாரி, ஹோஸ்பெட், சிறுகுப்பா தாலுகாக்கள், எப்போதும் இராயலசீமையின் பகுதிகளாகவே இருந்து வந்திருக்கின்றன; மேலும், இந்தப் பகுதிகளின் துங்கபத்திரா அணைப் பகுதிகளை உடனடியாக ஆந்திராவுக்கு மாற்றுமாறு மத்திய சர்க்காரை வற்புறுத்துவர்," என்றும் சஞ்சீவி ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

★

குழுவின் சிபாரிசு

இமாசலப் பிரதேசத்தில் எதிர்ப்பு

சிம்லா, அக். 13—

இமாசலப் பிரதேசத்தை, பஞ்சாபுடன் இணைக்க வேண்டுமென்ற மாநிலக் குழுவின் சிபாரிசுக்கு, இமாசலப் பிரதேச மந்திரிசபை எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது.

சிபாரிசு குறித்து மந்திரி சபை நேற்று விவாதித்ததாயும், அப்போது, சிபாரிசினை ஏற்றுக் கொள்ள இயலாதென்றும், இமாசலப் பிரதேசத்தைத் தனி மாநிலமாகவே வைத்திருக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் கோருவதெனவும் அவர்கள் முடிவு செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

மேலும், இமாசலப் பிரதேச சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்களும், மக்கள் சபை காங்கிரஸ்

★

'பதவியினின்றும் விலகுக'

மைசூர் மந்திரி சபைக்கு காங்கிரஸ் உறுப்பினர் கட்டளை?

மைசூர், அக். 13—

"உத்தேசிக்கப்பட்டுள்ள கர்நாடகத்தில் மைசூர் இணைய வேண்டும் என்ற விஷயத்தில் மைசூர் மந்திரிசபையில் பிளவு தோன்றி இருப்பதால், அவர்கள் உடனே பதவியினின்றும் விலக வேண்டும்"

என்று, சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் கோரப்பட்டிருக்கிறது.

★

குழு சிபாரிசின் எதிரொலி

ஒரு தொழிலாளி வேலையையும், மணப் பெண்ணையும் இழந்தார்

அகமதாபாத், அக். 15—

மாநிலக் குழுவின் அறிக்கை, ஒரு கடைச் சிப்பந்திக்கு, தனது வேலையையும், தான் மணந்துகொள்ளவிருந்த பெண்ணையும் இழக்கச் செய்திருக்கின்றதாம்.

பம்பாயின் எதிர்காலம் குறித்து, கைலாஸ் முக்தாவி என்ற கடைத் தொழிலாளி, தனது கடை முதலாளியுடன் வாக்குவாதம் செய்திருந்தார்; பேச்சு முற்றி, இருவரும் அடிதடியில் ஈடுபட்டிருக்கின்றனர்; விளைவு, முதலாளி கைலாசை வேலையிலிருந்து நீக்கியது மட்டுமின்றி, மணம் செய்து தருவதாகக் கூறியிருந்த தன் மகளையும் தர முடியாதெனக் கூறிவிட்டாராம்.

சொற் பயிற்சிக் கூட்டம்

16-10-55 மாலை 2½ மணிக்கு, சென்னை-பூங்கா நகர், எண் 32. அனுமந்தராயன் கோயில் தெருவில், அறிவியக்க மன்றச் சார்பில் தோழர் ஜி வெங்கடேசன் தலைமையில் நடைபெறும். 'தேவை' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

அண்ணாதுரை

அவர்களுக்கு

நன்னியூர் ஊராட்சி மன்ற வரவேற்பு

18-10-55 காலை 10 மணிக்கு, திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், நன்னியூர் ஊராட்சி மன்றத்தின் சார்பில், தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

கழகக் கூட்டங்கள்

★

குளித்தலை

திரு. வி. க. திடலில்

17—10—55 மாலை 6 மணிக்கு

தி. மு. கழக ஆண்டு விழா

தலைவர்: தி.வீ.முத்துகிருஷ்ணன்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அம்பில் ஏ. பி. தர்மலிங்கம்

★

புகளூர் (திருச்சி மாவட்டம்)

சர்க்கரை ஆலைக்கு அருகிலுள்ள செம்படாபாளையம் மைதானத்தில்

18-10-55 மாலை 6½ மணிக்கு

தலைவர்: எஸ். கே. சாமியப்பன்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அம்பில் தர்மலிங்கம்

டி. பி. மூர்த்தி

(கூட்டத்தில், புகளூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் சார்பில் மாநில மாநாட்டுக்கு நிதி அளிக்கப்படும்.

அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

அக். 16 காலை: காஞ்சீபுரம் உணவு விவசாயத் துறை விழா;
மாலை: பாபநாசம் (தஞ்சை) தி.மு.கழகப் பொதுக்கூட்டம்
17 மாலை: குளித்தலை தி. மு. க. பொதுக்கூட்டம்
18 காலை: நன்னியூர் பஞ்சாயத்து போர்டு வரவேற்பு;
மாலை: புகளூர் (திருச்சி மா.) தி. மு. கழகப் பொதுக்கூட்டம்;
19 புதுக்கோட்டை
20 காலை: புதுக்கோட்டை கல்லூரி;
மாலை: திருப்பத்தூர் (இராமநாதபுரம் மா.)
21 நாகர்கோயில் - சிறப்புச் சொற்பொழிவு

6,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

ஐதராபாத், அக். 14—

சிங்கரேணி சுரங்க அதிகாரிகள் 100 தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியதாகவும், 'போனஸ்' தருவதற்கு மறுத்ததாகவும் கூறப்படுகின்ற காரணத்தையொட்டி, 6,000 சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதுடன், சில அதிகாரிகளையும் தாக்கினராம்; போலீசார் விரைந்து சென்று, நிலைமையைக் கட்டுப்படுத்தியுள்ளனர்; 144 தடையுத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ளது

கண் நோயை ஒழிப்பதற்கு தீவிர நடவடிக்கை

ஜினீவா, அக். 15—

'டிரேக்கோமா' என்னும் கொடிய கண் நோயை ஒழிப்பதற்கு உலக சுகாதார நிறுவனம், கடந்த மூன்று ஆண்டுகளாகத் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்றும், சுமார் 40 இலட்சம் பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநில புது அமைப்புக் குழு தீர்ப்பு (தி. மு. க. விளக்கம்)

இடம்: சென்னை கோகலே மன்றம்

நாள்: 16—10—55 ஞாயிறு காலை 9 மணிக்கு

தலைவர்: **அ. பொ. அரசு**

பேசுவோர்: **என். வி. நடராசன்**

(தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர்)

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

★

நன்கொடை: அணா 8, 4 (மாநில மாநாட்டு நிதி)

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

அரசியல் காரணங்களுக்காக தமிழர் கடைகள் தாக்கப்படவில்லையாம்!

இலங்கை நிதி மந்திரி கூறும் 'சமாதானம்'

முழு விசாரணை நடத்துமாறு முதலமைச்சர் உத்தரவு

கடந்த புதனன்று, கொழும்பு நகரில், இந்தியர் கடைகள் தாக்கப்பட்டது சம்பந்தமாக முழு அளவில் போலீஸ் விசாரணை நடத்துமாறு, இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை உத்திரவிட்டுள்ளார்.

தமிழர்களின் கடைகள்தான் அதிகமாகத் தாக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

கலவரத்தில், 6 பேர்களுக்கு இலேசாகக் காயம் ஏற்பட்டதென்றும், 2 பேர் கைது செய்யப்பட்டனரென்றும் செய்திகள் கூறுகின்றன.

'கொழும்பு வீதிகளில், தமிழர்களின் கடைகள் சூறையாடப்பட்டது, அரசியல் காரணங்களுக்காக அல்ல,' என்று, சென்னைக்கு வந்த இலங்கை நிதிமந்திரி கூறியுள்ளார்.

கடைகள் கொள்ளையிடப்பட்டதை ஒப்புக்கொண்ட அவர், விரோதம் காரணமாக இந்நிகழ்ச்சி நடைபெறவில்லை என்றும், 5 கடைகள் மட்டுமே தாக்கப்பட்டதாகவும், செய்திகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

★

இலண்டனில் பேச்சுவார்த்தையாம்!

சென்னை, அக். 14—

"இலங்கை இந்தியருக்குக் குடி உரிமை வழங்கும் பிரச்சினையில் அவர்களுக்குச் சிரமம் ஏற்படாதவாறு திருப்திகரமான தீர்வு காண்பதே இலங்கை அரசாங்கத்தின் விருப்பமாகும்,"

என்று, இலங்கை நிதிமந்திரி எம் டி. எச். ஜெயவர்த்தனே கூறினார்.

"குடிஉரிமை கோரி இலங்கை இந்தியர் செய்திருக்கும் மனுக்கள் பதிவு வேலை நடந்து கொண்டிருக்கிறது; 1957 முடிவுக்குள் இது பூர்த்தியடைந்துவிடுமென்று நம்பப்படுகிறது; எத்தனை பேருக்குக் குடிஉரிமை கிடைத்தது, எத்தனை பேருக்குக் கிடைக்கவில்லை என்ற பிரச்சினை, அப்போது நன்கு தெளிவாகிவிடும்; இரு சர்க்கார்களும் முனைந்து நின்று பிரச்சினையில் முடிவு காண்பதும் எளிதாகும்" என்று அவர் குறிப்பிட்டார்.

எதையாவது குற்றம், குறை கூறி, இந்தியரின் குடிஉரிமை மனுக்களை இலங்கை சர்க்கார் நிராகரித்து வருவதாகக் கூறப்படுவதை மந்திரி மறுத்தார்; மனுதாரின் உண்மை நோக்கமென்ன என்பதை அறிவதுதான் பிரச்சினை என்று அவர் எடுத்துரைத்தார்;

"இலண்டனில் காமன்வெல்த் நாடுகளின் பிரதம மந்திரிகள் மாநாடு நடக்கும்போது, இலங்கைப் பிரதமரும்—இந்தியப் பிரதமரும் சந்தித்து, இலங்கை இந்தியர் பிரச்சினை குறித்து விவாதிக்கக்கூடும்," என்றும் அவர் நம்பினார்.

திருவண்ணாமலை வட்டார தி. மு. கழக (கிளை) தோழர்கட்கு

★

"19—10—55 அன்று, திருவண்ணாமலை தி. மு. கழகச் சார்பில், தோழர் மு. கருணாநிதி அவர்களிடம் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும். திருவண்ணாமலை வட்டாரத்திலுள்ள கிளைக் கழகச் செயலாளர்கள் தங்கள் தங்கள் கிளைக் கழகத்தின் பங்குத் தொகையையும் அன்று அளித்துவிட வேண்டுகிறேன்"

என்று, வட ஆற்காடு மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அறிவிக்கிறார்.

காதலனையே மணக்க இளவரசி முடிவு!

லண்டன், அக். 14—

தான் தனது காதலனான பீடர் டௌன்செண்டை மணம் புரிவது தவிர்க்க முடியாதது என்று, பிரிட்டிஷ் இளவரசி மார்கரெட் இறுதியாகத் தனது குடும்பத்தாருக்குத் தெரிவித்துவிட்டதாகத் தெரிய வருகிறது.

மூன்றாண்டுகளுக்குப் பின்னர், மார்கரெட்டும் — டௌன்செண்டும் நேற்று சந்தித்து, பால்மோரல் அரண்மனைக்கு முகமலர்ச்சியுடன் வந்தபோது, இரு மாதங்களாக இராஜ குடும்பத்திற்குள் நடைபெற்று வந்த பேச்சு வார்த்தை இனிது முடிந்ததாகத் தோன்றியுள்ளதாம். இவ்வாண்டு இறுதிக்குள், திருமணம் நடைபெறக் கூடுமாம்.

இத்திருமணத்திற்கு, இராணி எலிசபெத் செல்லமாட்டாராம்; விவாகச் சடங்குகளை, பார்லிமெண்டே மேற்கொள்ளுமாறு கோருவாராம்.

திருமணத் தம்பதிகளுக்கு, இராணியின் அன்னை, தன்னுடைய அரண்மனையைத் தரக்கூடுமாம்.

இளவரசி மார்கரெட்டின் எதிர்காலம் குறித்து அதிகாரபூர்வமான அறிவிப்பு எதுவும் இப்போது யோசிக்கப்படவில்லை என கிளாரன்ஸ் இல்லத்திலிருந்து வெளியாகியுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன், எம் ஏ.